1979 பிப்ரவரி 22]

(5) அரசினர் தீர்மானம்

விதி 23-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை "தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 23-ஐத் தளர்த்தி, இப்பேரவையில் இன்று அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

(6) கவன ஈர்ப்புகள்

அரிசன மக்களை ஏமாற்றி வட மாநிலம் அழைத்துச் சென்று கொடுமைபடுத்தி வேலை வாங்கியதாகக் கூறப் பெறுவது குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதி 41-ன்கீழ் திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், சேலம் மு. ஆறுமுகம், ஆகியோர் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் ஒன்றியம் மேல்வில்வராய நல்லூர் அரிசன மக்கள் 21 பேரை ஏமாற்றி அதிகக் கூலி தருவ தாகக் கூறி உத்திரப் பிரதேச மாநிலம், மீர்ஜாப்பூர் மாவட்டம், தல்லா என்னுமிடத்திற்கு அழைத்துச் சென்று இரண்டு மாத காலம் ஸ்ரீகன்னா கம்பெனியில் வேலை கொடுமையான முறையில் வாங்கப்பட்டு சிலர் கொடுமைகள் தாங்க முடியாமல் இறந்து விட்டும், கூலியும் கொடுக்கப்படாமல் ஏமாற்றப்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த 21 அரிசனங்கள் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள கான்ராக்டருக்கு விற்பனை செய்யப்பட்டு இருப்பதாக 1979ஆம் ஆண்டுசனவரி திங்களில் நடந்த வட ஆற்காடு மாவட்ட வளர்ச் சிக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்தப் புகாரை ஒட்டி வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்தார்.

2. திரு. மரியசாமி நாயுடு என்பவருடைய சகோதரர் திரு. ராஜு நாயுடு உத்திரப் பிரதேச மாநிலத்தில், மீர்சாபூர் மாவட்டத்தில், தல்லா என்ற இடத்தில் உள்ள ஸ்ரீ கன்னா என்ற நிறுவனத்தில் மேற்பார்வையாளராக (மேஸ்திரி) வேலை செய்கிறார். மேற்சொன்ன ராஜு நாயுடு நம்பியந்தல் கிராமத்திற்கு சில மாதங்களுக்குமுன் வந்திருந்தார். வில்வராயநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த 21 அரிசனங்களும் நம்பியந்தல் கிராமத்தைச் சேர்ந்த 20 இந்து மக்களையும் அவர் 'தல்லா' என்ற இடத்திற்கு வேலைக்காக அழைத்துச் சென்றார். அவர்கள் கூலி வேலை செய்வதற்கு வருவதாகத் தாங்களே கூறியதாகச் சொல்லப்படுகிறது. திரு மரியசாமி என்பவர் அவருடன் தல்லாவிற்கு அழைத்துச் சென்று அங்கு விட்டு விட்டு வந்து விட்டார். காவல் துறையின் புலனாய்விலிருந்து அவர்களுக்கு அங்கு கூலி குறைவாகக் கொடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் கொடுமைக்கு உட்படுத்தப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது. காவல் துறையினரின் அறிவுரைப்படி, திரு. மரியசாமி நாயுடு 29—12—78 அன்று ''தல்லா'' விற்குச் சென்று 13—1—79 அன்று மேற்சொன்ன அரிசன மக்கள் இருவரைத் தவிர மற்ற எல்லோரையும் கிராமத்திற்குத் திரும்ப அழைத்து வந்து விட்டார். ஒருவர் மட்டுமே தல்லாவிலேயே உடல் நலிவுற்று மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு அங்கு இறந்து விட்டார். மற்றொருவர் இன்னும் அவருடைய சொந்த கிராமத்திற்குத் திரும்பவில்லை.

3. விசாரணையிலிருந்து தல்லாவிற்கு அழைததுச் சென்று விட்ட அரிசன மக்களுக்கு முன்பணம் கொடுக்கப்பட்டும், அங்கு அவர்கள் தங்குவதற்கு சிறு கூடாரங்களும், ஆடைகளும் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அவர்கள் கிராமத்திலிருந்து தல்லாவிற்குப் போகவும் அங்கேயிருந்து திரும்ப கிராமத்திற்கு வந்ததற்கும் ஆன ரயில் கட்டணத்தையும் மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனமே ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. மிகுந்த குளிரினால் அந்தத் தொழிலாளர்கள் தல்லாவில் சரியாக வேலை செய்ய முடியவில்லை என்றும் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

4. இது விவரம் பற்றி 3—2—79 அன்று நடந்த வட ஆற்காடு மாவட்ட வளர்ச்சிக்குழு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. இதுபற்றி மேலும் தீவிர நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்றும் இத்தவறுக்கு உடந்தையானவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டதால் மாவட்ட ஆட்சியர், வருவாய்த்துறை கோட்டாட்சியரை தீவிர விசாரணை நடத்தும்படி பணித்துள்ளார். அவரது அறிக்கை பெற்றபின் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

1979 பிப்ரவரி 22]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை திருப்பதிக்கு அருகிலேதான் வேலை இருக்கிறது என்று சொல்லி அழைத்துச் சென்றார்கள். அதற்கு மாறாக 21 அரிசனங்களை உத்தரப் பிரதேசத்திற்கு அழைத்து சென்றிருக்கிறார்கள். அவர்களை அங்கு அழைத்துச் சென்றதிலிருந்து, தகவல் வந்து, புகார் சொல்லி, அவர்களைத் திருப்பி அழைத்து வந்ததுவரையில் 55 நாட்கள் ஆகியிருக்கிறது. ஆனால் 40 ரூபாய்தான் கூலி கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்த நாட்களுக்கும் கூலி கொடுக்கப்படவில்லை. சொன்னதற்கு மாறாக அழைத்துச் சென்றதால் பிச்சாண்டி என்பவர் வேலை செய்ய மறுத்து, ஊருக்குத் திரும்ப முயற்சி செய்ததால், அவர் அங்கே கடுமையாக அடிக்கப்பட்டு, கொடுமைப் படுத்தப்பட்டதால் இறந்திருக்கிறார். அவர் இறந்ததற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு 55 நாட்களுக்கு அனைவருக்கும் கூலி கொடுக்கப்பட வேண்டும். இறந்து விட்ட பிச்சாண்டி குடும்பத்திற்குக் கம்பெனியிலிருந்து அல்லது அரசாங்கத்திலிருந்து ஈட்டுத் தொகை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய புகாரை வைத்துக் கொண்டுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட கம்பெனிக்கும் அழைத்துச் சென்றவர்களுக்கும் தேவையான அறிவுரைகளைச் சொல்லி, அவர்களைத் திருப்பி அழைத்துவர அவருடைய அலுவலகத்திலுள்ள ஒரு அலுவலரை நியமித்திருக்கிறார் அவர் அந்த இடத்திற்குச் சென்று, எல்லா விவரங்களையும் விசாரித்து அறிக்கை தந்த பிறகு யார், யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவர்கள்மீது எல்லாம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். கூலி பாக்கி இருந்தால் அதை வாங்கித்தர தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அமைச்சரவர்கள் விளக்கம் அளிக்கும்போது இன்னொரு தகவலையும் தந்தார்கள். நம்பியந்தல் கிராமத்திற்கு அரிசனங்கள் அழைத்துச்செல்லப்பட்டார்கள். கண்ணம்மாள் என்ற அரிசன பெண் கடுமையாகத் தாக்கப்பட்டு இறந்திருக்கிறார். வேறு இருவரும் இறந்திருக்கிறார்கள். இறந்த குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் மிகவும் ஏழைகள். ஆகையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு உடனடியாக ஏதாவது நிவாரண உதவி செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன்: தலைவரவர்களே, யார், யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், எத்தனை பேர் இறந்திருக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் அரசுக்குத் தெரிந்த பிறகு யார் யாருக்கு பரிகாரம் தரவேண்டுமோ அவர்களுக்கு நிச்சயமாக பரிகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மருத்துவப் பணியில் தற்காலிக உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு மருத்துவப் பணியில் தற்காலிக உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இதுவரை பின்பற்றப்பட்டு வந்த நடைமுறை விதிகளிலிருந்து விலகி, பணி மூப்பு நிலை பற்றிய நடைமுறைகளைப் புறக்கணித்து விட்டதால் ஏற்பட்டுள்ள அதிருப்தியால் நேர்ந்துள்ள பதட்ட நிலை'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: தலைவரவர்களே :

எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் ஹவுஸ் சர்ஜன்ஸ் பயிற்சி முடித்த பின்னர், இந்திய மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்து கொள்கிறார்கள். இவர்களுள், தமிழ்நாடு மருத்துவப்பணியில் தற்காலிகப் பணி வேண்டுவோர், மருத்துவப் பணியாளர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநருக்கு விண்ணப்பித்து வந்தனர். அவர்களின் விண்ணப்பங்கள் வந்த தேதி வாரியாக இயக்குநரால் பதிவு செய்யப்பட்டு வந்தன.

2. இம்மாதிரி வரும் மனுக்களை, அவர்கள் எம்.பி.பி.எஸ்ஸில் தேர்ச்சி பெற்ற ஆண்டை அடிப்படையாக வைத்து பதிவு செய்யப்பட்டது. பின்னர், யார் அதிக சதவீத மதிப்பெண்கள் பெற்றார்களோ, அவர்களை முதலிலும், அதற்குக் குறைந்து மதிப்பெண்கள் பெற்றவர்களை அதற்குக் அடுத்தபடியாகவும் வைத்து மதிப்பெண்களின் அடிப்படையில் மனுக்கள் வரிசைப் படுத்தப்பட்டன. உதவி மருத்துவர் (Assistant Surgeons) பதவிகள் காலியாகும்போது அந்தப் பட்டியலிலிருந்து தற்காலிக நியமனங்கள் செய்யப்பட்டன. ஆனால், பெரும்பாலானவர்கள், தாங்கள் விரும்புகின்ற இடங்களில் பதவி கிடைக்காததனாலும்,